அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 7/89

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
31 ஜனவரி, 1989.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

தாபனக் கோவையின் திருத்தங்கள்
விசேட லீவு - அத்தியாயம்

1986 ஆகஸ்ட் 26ஆம் திகதிய 340-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட, மேற்போந்த அத்தியாயத்தின் 12:10ஆம் பந்தி கீழ்க்காணும் வகையில் மேலும் திருத்தப்படுகிறது.

" 12:10 - இலங்கை மருத்துவச் சங்கம் இலங்கை பொறியியலாளர் நிறுவனம், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம், இலங்கை நூலக சங்கம், இலங்கை இரசாயனவியல் நிறுவனம் இலங்கை அளவையாளர் நிறுவனம், இலங்கைக் கட்டடக் கலைஞர் நிறுவனம் என்பவற்றின் உறுப்பினர் ஒருவர் இந்தச் சங்கங்களின் வருடாந்த அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படலாம். ஆயினும் இவர்கள் இவற்றுக்கு விடுவிக்கப்படுமிடத்து திணைக்களத்தின் வேலைகள் பாதிக்கப்படலாகாது. வேலைக்கு இவர் சமுகமளியாதிருக்கும் நேரம் இவரது லீவில் கழிக்கப்படலாகாது. இந்நோக்கத்துக்கென இலவச புகையிரதப் பயணச்சீட்டும் வழங்கப்படலாம். எனினும் வேறு பயணச் செலவுகள் வழங்கப்படலாகாது.

ஒப்பம்: சிறில் கமகே.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.